# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C.107/2023 | Date: 10.12.2024 |
| Deposition of Witness for | : | **அ.சா.3** | |
| Name | : | **ராஜேஷ்குமார்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை :–**

1) எங்கள் ஊரில் இருந்து கோவையில் உள்ள ஈஷா யோகா மையம் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஏற்பட்டது என்றால் சுமார் 06 மணி நேரம் ஆகும். எப்போது புறப்பட்டு எப்போது சென்றடைந்தோம் என்றால் இரவு சுமார் 10.00 மணிக்கு புறப்பட்டு ஈஷா யோகா மையத்திற்கு விடியற்காலை சுமார் 04.00 மணிக்கு சென்றடைந்தேன். இருசக்கர வாகனத்தை போகும்போது யார் ஓட்டிசென்றார் என்றால் சூர்யா (அ.சா.2) ஓட்டிசென்றார். திரும்பி வரும்போதும் அவர் தான் ஓட்டிவந்தாரா என்றால் ஆமாம். ஈஷா யோகா மையத்தில் இருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் காலை சுமார் 08.00 மணியளவில் புறப்பட்டோம். நாங்கள் சென்ற வாகனம் 200 சிசி குதிரைத்திறன் கொண்ட வாகனம் என்றால் சரிதான்.

2) மேற்படி, சூர்யாவிற்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் மூவரும் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தோமா என்றால் சூர்யா மட்டும் அணிந்திருந்தார். மேற்படி, சங்கதியை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி சூர்யா அணிந்திருந்த

தலைகவசத்தை போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் ஞாபகமில்லை. விபத்து எங்கு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சங்ககிரி மேம்பாலத்தில் ஏற்பட்டது. மேற்படி, சங்கதியை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன்.

3) சங்ககிரி எல்லையில் 02 அல்லது 03 இடங்களில் தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் எந்த மேம்பாலம் என்று நான் குறிப்பிட்டு போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல்நாள் இரவு சுமார் 10.00 மணியிலிருந்து நாங்கள் மூவரும் இருசக்கர வாகனத்தில் நெடுந்தூரம் பயணம் செய்தும், பின்னிட்டு தூங்காமல் மீண்டும் மறுநாள் காலை நெடுந்தூரம் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் அதனால் ஏற்பட்ட சோர்வின் காரணமாக சூர்யா தூக்க கலக்கத்தில் கவனக்குறைவாக வாகனம் ஓட்டிசென்று பாலத்தில் இடதுபுறத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றும், எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், சாலை விதிகளை பின்பற்றாமல் இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்தோம் என்றும், அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.R.Babu,

Sd/-Rajeshkumar

Judicial Magistrate No.I,
Sankari.